# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவு அஞ்சல் மூலம்

67

## நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்

திருமதி.பு.கவிதா,B.E., M.Plan .,
துணை இயக்குநர்/ உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்,
எண்.43/397A, இரண்டாம் தளம்,
அன்னை இந்திரா காந்தி சாலை,
இராஜாஜிபுரம் பகுதி – II,
திருவள்ளூர் - 602 001.
தொலைபேசி - 044-29595440.
email-dtcptiruvallur@gmail.com

பெறுநர்

ஊராட்சி மன்ற தலைவர்,
கார்த்திகேயபுரம் ஊராட்சி மன்றம்,
திருத்தணி ஊராட்சி ஒன்றியம்,
திருவள்ளூர் மாவட்டம்.

ந.க.எண்.09/2022/ திருவள்ளூர்-2 நாள். 12.07.2022.

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் - திருவள்ளூர் மாவட்டம் - திருத்தணி வட்டம் - திருத்தணி ஊராட்சி ஒன்றியம்- கார்த்திகேயபுரம் கிராமம் - சர்வே எண்.187/1-ல் 4.79 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை:

1. மனுதாரர்.திரு.P.தாமோதரன், அவர்களின் கடிதம் நாள்.03.01.2022. இணையதள விண்ணப்பம் எண்.202106401018230, நாள்.30.12.2021
2. இவ்வலுவலகக் கடிதம், இதே எண், நாள்.13.04.2022.(சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரியது).
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம். ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
4. மனுதாரர்கள். திரு.P.தாமோதரன், அவர்களின் கடிதம் நாள்.13.05.2022 (சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட தானப்பத்திர எண்.2568/2022, நாள்.11.04.2022 மற்றும் கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்வாரியத்திற்கான பொது ஒதுக்கீடு செய்யப்பட்ட தானப்பத்திர ஆவணம் எண்.2566/2022, நாள்.11.05.2022)
5. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.
6. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017.
7. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
8. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3) நாள்.23.09.2020.
9. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1) நாள்.09.12.2020
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.30.08.2017,
11. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.

12. இணை இயக்குநர், வேளாண்மைத்துறை, திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் கடிதம் எண்.மதி1/9983/2018, நாள்.19.11.2018.

13. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி. நாள்.04.07.2014.

14. அரசாணை (நிலை) எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.29.11.2018. (Insisting TNRERA Registration)

*****

**உத்தரவு :**

பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி ஊராட்சி ஒன்றியம், கார்த்திகேயபுரம் கிராமம், சர்வே எண்.187/1-ல் 4.79 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் **நாள்.08.04.2022-ன்** மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 4-ல் சுட்டிய மனுதாரர் கடிதம் மூலம் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு தானபத்திர **எண்.2568/2022, நாள்.11.04.2022 மற்றும் மின்வாரியத்திற்கான பொது ஒதுக்கீடு செய்யப்பட்ட தானப்பத்திர ஆவணம் எண்.2566/2022, நாள்.11.05.2022-ன்** அசல் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்)எண்.91/2022** என எண்ணிடப்பட்டு 3 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. பார்வை 9-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7-ல் கண்ட TNCDBR – 2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicants directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitites like storm water drains, water supply facilities byconstructing required OHT, provide necessary street lights etc, as per the standards specified by the Local Body.

2. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடித மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. பார்வை 13-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில், நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களின் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

"சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால், அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

5. பார்வை 6-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவிற்கு விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**Head of Account**

"0217 Urban Development 60 - Other Urban
Development Schemes - 800 Other Receipts - AS
Receipts Under Land Use Conversion Charges - 27
Non Taxation fees - 09 collections".
(DPC: 0217-60-800-AS-22709)

2..

6. பார்வை 5 மற்றும் 7-ல் காணும் அரசாணைகளின்படி மனைப்பிரிவுக்கான பரிசீலனை, கட்டணம் ரூ.30,000/-(ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) நன்மதிப்பு வரி ரூ.34,500/-(ரூபாய், முப்பத்தி நான்காயிரத்து ஐநூறு மட்டும்), Display Board கட்டணம் ரூ.1,500/-(ரூபாய், ஆயிரத்து ஐநூறு மட்டும்) பெறப்பட்டுள்ளது. மேலும் கொடிநாள் நிதியாக கட்டணம், ரூ.7,000/-/-(ரூபாய் ஏழாயிரம் மட்டும்) "Armed Forces Flag Day Fund" செலுத்தப்பட்டுள்ளது.

**இணைப்பு:**

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
( 3 தொகுப்பு மற்றும் அசல் தானப்பத்திரம்)
(தானப்பத்திர எண்.2568/2022, நாள்.11.04.2022
மற்றும் மின்வாரியத்திற்கான பொது ஒதுக்கீடு
செய்யப்பட்ட தானப்பத்திர ஆவணம் எண்.2566/2022,
நாள்.11.05.2022)

துணை இயக்குநர் / உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருவள்ளூர் மாவட்டம்.

நகல்

| | | | |
|---|---|---|---|
| 1 | வட்டாட்சியர், திருவள்ளூர்-602001. | - | For incorporation in the Tamil Nilam and Collabland Software. |
| 2 | உதவி இயக்குநர், நில அளவை துறை, திருவள்ளூர் மாவட்டம். (சாலை மற்றும் பொது ஒதுக்கீட்டினைஉள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு.) | - | சாலை மற்றும் பொது ஒதுக்கீடு பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்கள் உட்பிரிவு செய்யும் பொருட்டும் மற்றும் For incorporation in the Tamil Nilam and Collabland Software. |
| 3 | Tamil Nadu Real Estate Regulatory Authority, No.1A, 1st Floor, CMDA Tower II, Gandhi - Irwin Bridge Road,Egmore, Chennai- 600 008. | | |
| 4 | சார்பதிவாளர், திருத்தணி சார்பதிவாளர் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் | - | (ஊராட்சி மன்றத் தலைவர், கார்த்திகேயபுரம் மூலமாக) |
| 5 | இருப்பு கோப்பு | | (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம் -1) |
| 6 | மனுதாரர் ( பத்தி ஒன்று மட்டும்) | - | திரு.P.தாமோதரன், த/பெ.பாண்டுரங்கன், A.N.கண்டிகை பழனிப்பேட்டை, அரக்கோணம் வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம். |

(71)

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்பு துறை, திருவள்ளூர் மாவட்டம்

கோப்பு எண்.09/2022/திருவள்ளூர் -2 நாள். 07.2022

## கார்த்திகேயபுரம் ஊராட்சி

**மனைப்பிரிவு. ம.வ/மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்)எண்.91/2022**

1. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்டவரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோக மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிப்பாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால் கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8. மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடைய **ம.வ./மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்)எண்.91/2022** ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

..2..

9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence ) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும், இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர் நகர் ஊரமைப்பு துறையிடமிருந்து **ம.வ./மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்) எண்.91/2022** மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நிலஉரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்குPlanning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்டPlanning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.



000072

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின்
ஒதுக்கீடு விவரம்

| ஒதுக்கீடு விவரம் | : | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : | 19400 ச.மீ ( 4.79 ஏக்கர் ) | - |
| ஒதுக்கிய மனைகள் | : | 115 | - |
| EWS மனைகள் | : | 1348 ச.மீ (35 முதல் 41 வரை மற்றும் 52 முதல் 66 வரை ) | 10.17% |
| பொது ஒதுக்கீடு. மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது | : | - | |
| சாலையின் பரப்பு | : | 6151 ச.மீ | - |
| பூங்கா | : | 1328 ச.மீ | 10.02% |
| புல்வெளி | : | 136.50 ச.மீ | - |
| உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | : | 69.85 ச.மீ | 0.53% |
| தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது | : | 69.10 ச.மீ | 0.53% |

துணை இயக்குநர் / உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருவள்ளூர் மாவட்டம்.

11.7.2022

செல் : 9444111981
9597948157

# கார்த்திகேயபுரம் ஊராட்சி மன்றம்

கார்த்திகேயபுரம் கிராமம் – 631211, திருத்தணி ஒன்றியம்,
திருத்தணி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்

(79)

திருமதி.K. சந்திரா குப்பன்
ஊராட்சிமன்றத் தலைவர்
கார்த்திகேயபுரம் ஊராட்சி

தேதி : ............................

பொருள் : குடியிருப்புமனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவள்ளூர் - திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி ஊராட்சி ஒன்றியம், கார்த்திகேயபுரம் ஊராட்சி / கிராமம், சர்வே எண்.187/1-ல் 4.79 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்தல் - தொடர்பாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம். ந.க.எண் 09/2022/திருவள்ளூர்-2, நாள் : 12.07.2022
2. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் : 04.06.2004
3. நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரு.86938.05/- செலுத்தியதற்கான பல்வகை ரசீது எண் 39731 நாள் : 24.08.2022
4. ஆய்வுக் கட்டணம் ரு.1000/- செலுத்தியதற்கான பல்வகை ரசீது எண்: 39732 நாள் : 24.08.2022
5. கார்த்திகேயபுரம் ஊராட்சி தீர்மான எண் 52, நாள் :15.08.2022

**உத்திரவு :**

பார்வை (1)-ல் குறிப்பிட்டுள்ள சென்னை நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், அவர்களின் செயல்முறைகளின் திருத்தணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, கார்த்திகேயபுரம் ஊராட்சி கிராம சர்வே எண் 187/1-ல் மனைப்பிரிவுகளில் மனை எண்கள் : 1 முதல் 115 வரை ஆகியவைகள் 4.79 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உத்தேச மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு வரன்முறைப்படுத்துதல் ம.வ./மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்) எண்91/2022-ல் வரன்முறைப்படுத்தி, சாலை, பூங்கா மற்றும் மின்மாற்றி ஆகியவை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும், உத்தேச குடியிருப்பு புதிய மனைப்பிரிவில் உள்ள காலி இடத்தில் மின்சார மின்மாற்றி அமைக்கவும் கார்த்திகேயபுரம் ஊராட்சிக்கு தான பத்திர ஆவண எண் 2568/2022, நாள்:11.04.2022 மற்றும் மின்வாரியத்திற்கான பொது ஒதுக்கீடு செய்யப்பட்ட தானப்பத்திர ஆவணம் எண் 2566/2022, நாள்.11.05.2022 கார்த்திகேயபுரம் ஊராட்சி மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

மேலும் நிலப்பயன் மாற்றக்கட்டணங்கள் பார்வை(3) மற்றும் பார்வை(4)-ல் குறிப்பிட்டுள்ளபடி உரிய தலைப்புகளில் செலுத்தி அதற்கான ரசீதுகள் சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் இதற்கான தீர்மான கார்த்திகேயபுரம் ஊராட்சி மன்றத்தால் நிறைவேற்றப்பட்டு தீர்மான எண் :52 அளிக்கப்பட்டுள்ளது.

K.சந்திரா
தலைவர்
கார்த்திகேயபுரம் ஊராட்சி மன்றம்
திருத்தணி ஊராட்சி ஒன்றியம்

தலைவர்
கார்த்திகேயபுரம் ஊராட்சி
திருத்தணி ஊராட்சி ஒன்றியம்,
திருவள்ளூர் மாவட்டம் - 000079

பெறுநர் : திரு.P.தாமோதரன்
த/பெ.பாண்டுரங்கன்,
A.N. கண்டிகை பழனிப்பேட்டை,
அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.



## our services doesn’t just end there

### Buying & Selling Services
Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services
Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals
Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services
Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services
Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate